[18th September 1961

தான் ஊர்வலமாகச் சென்று அதிகாரியைப் பார்ப்பது என்ற நோக்கத்தோடு போனார்கள். அப்படிப் போனது தவறு? அதற்காக வேண்டி 'அரெஸ்ட்' செய்தது முறையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஊர்வலமாகப் போனார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொள்வதுபற்றி மகிழ்ச்சி. அனுமதி இல்லாமல் ஊர்வலம் போனதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Famine Relief Work

* 1580 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken for the formation of Pond Works in Erode taluk to give relief to the drought affected people of that area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have not sanctioned pond works in Erode Taluk as a relief measure as the conditions in the taluk did not warrant any such step.

SRI N. K. PALANISAMI : May I know whether there is any proposal to entrust the work of formation of ponds to the District Collectors instead of the Food Production Department, and if so, may I know the reasons for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea about it just now. So, I would like to have notice.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்தக் கேள்வியில் "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக" என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், "பஞ்ச நிவாரணம்" என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில்கூட, "பஞ்ச நிவாரணம்" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டு பணம் ஒதுக்கப்படுகிறது. பஞ்சங்கள் எந்தக் காலத்திலோ ஏற்பட்டன. அப்பொழுது இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டது பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால், இப்பொழுது அவசியமில்லை. ஆகையால், இனிமேல் அந்த முறையைக் கையாளாமல் மாற்று வதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

DEPUTY SPEAKER : How does it arise from the main question?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்குத் தனியாக கேள்வி போடலாம்.

Public Works Department Shed (Aduthurai)

* 1581 Q.—T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஆடுதுறையில்ஷெட்டை (P.W.D). அகற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா?